## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **கிறிஸ்தவ நாகரிகம்**<br>**Christian Civilization** | **One Hours**<br>**Gr -12 (2022)** | **49** | **T** | **I,II** |

**பகுதி – I**

❖ ***மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்து.***

01. உலகில் நாகரிகம் குறித்து பேசக்கூடிய காலப்பகுதி.
   1) கி.மு 4000   2) கி. மு 6000   3) கி.மு 8000
   4) கி.மு 10000   5) கி.மு 2000

02. இன்றைய மத்திய கிழக்கு நாட்டில் ஈராக் எனக் குறிப்பிடப்படும் பகுதி முன்னர் அழைக்கப்பட்டது.
   1) எகிப்து   2) மொசபத்தேமியா   3) பாரசீகம்
   4) அசீரியா   5) சிரியா

03. ஆபிரிக்கா கண்டத்தில் மிஸிர் பிரதேசத்தில் அமைந்துள்ள பகுதி.
   1) கானான்   2) கல்தேயா   3) எகிப்து
   4) பபிலோனியா   5) சிரியா

04. இஸ்ரயேலர் எகிப்தில் வாழ்த ஆண்டுகள்.
   1) 200 ஆண்டுகள்   2) 350 ஆண்டுகள்   3) 150 ஆண்டுகள்
   4) 400 ஆண்டுகள்   5) 450 ஆண்டுகள்

05. பாரசீகர் ஆட்சியைத் தொடர்ந்து பலஸ்தீனாவை ஆட்சி செய்தவர்கள்.
   1) எகிப்தியர்   2) கிரேக்கர்   3) உரோமையர்
   4) அரேபியர்   5) அசீரியர்

06. பகுத்தறிவிற்கு முதலிடம் வழங்கி சிந்தித்து சிக்கல்களை அலசி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் முறையை உலகிற்கு வழங்கிய நாகரீகம்.
   1) உரோமையர் நாகரிகம்   2) பபிலோனிய நாகரிகம்   3) யூத நாகரிகம்
   4) கிரேக்க நாகரிகம்   5) அசீரிய நாகரிகம்

07. அரமேய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருவிவிலியம்.
   1) செப்டுவாயின்ட்   2) வுல்கத்தா   3) எழுபதின்மர் நூல்
   4) மசரோடிக்   5) தர்ர்கும்

08. அரிஸ்டோட்டிலின் உபாதன காரணமாக கொள்ளக்கூடியது.

1) சிற்பியின் சிந்தனையில் இருக்கும் வடிவம்

2) சிலை

3) சிற்பி

4) ஒரு காரணத்திற்கான செயற்பாட்டின் முடிவு.

5) மாபிள்

09. கி.பி நான்காம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உரோமைப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணம்.

1) தீவிரவாதிகள் 2) நாகரீகம் அடையாத மக்கள் குழுவினர்
3) கிரேக்கர் 4) யூதர்கள் 3) பிரான்சியர்

10. 'வுல்கத்தா' இலத்தின் மொழி பெயர்ப்பிற்கு காரணமாக விளங்கியவர்.

1) திருத்தந்தை தமாஸ்கஸ் 2) திருத்தந்தை பசில் 3) திருத்தந்தை இரேனியுஸ்
3) திருத்தந்தை கிரகோரியார் 5) அகுஸ்தீனார்

11. கெரிசிம் மலை உள்ள பிரதேசம்.

1) கலிலேயா 2) யூதேயா 3) எருசலேம்
4) பெத்லகேம் 5) சமாரியா

12. கிக்கோசு என்பவர்களின் ஆட்சியை முறியடித்து புதிய எகிப்திய பேரரசை நிறுவியவர்.

1) 2ம் இராம்சேசு 2) 3ம் கோத்மாசு 3) 4ம் ஆமன் கோட்டபு
4) ரோமுலஸ் 5) பொம்பே

13. இஸ்ரயேலரை துன்புறுத்திய பெலிஸ்கியரை தோற்கடித்து அவர்களைப் பாதுகாத்த நீதித்தலைவர்.

1) தெபோரா 2) கெதயோன் 3) இப்தா 4) சிம்சோன் 5) ஒத்தனியேல்

14. சவுல் அரசன் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

1) பெஞ்சமின் 2) யூதா 3) லேவி 4) மனாசே 5) எப்ராயிம்

15. வட அரசில் பணிபுரிந்த இறைவாக்கினர்களைக் கொண்ட தொகுதி.

1) எலியா, எலிசேயு, ஆமோஸ் 2) ஆமோஸ், ஓசேயா, எரேமியா
3) சொயா, எரேமியா, மீக்கா 4) எலியா, எரேமியா, ஓசேயா
5) எசேக்கியேல், எசாயா, எரேமியா

16. A) பாரசீக மன்னரால் யூத நாட்டிற்கு ஆளுனராக நியமிக்கப்பட்டவர்.

B) ஆரோனின் குடும்பத்தில் வந்த சாராயியாசின் மகன்

C) திருச்சட்ட வல்லுநர்

D) அர்த்தக்கஸ்தாவுக்கு பானப்பணி விடைக்காரனாக இருந்தவர்

இவற்றுள் நெகேமியாவுடன் தொடர்புடைய கூற்றுக்கள்.

1) A B 2) C D 3) B C 4) A C 5) A D

17. பரிசேயர், சதுசேயர் என்ற சமயப்பிரிவினர் தோற்றம் பெற்றது.

1) உரோமையரின் ஆட்சியின் போது
2) பிலிஸ்தியரின் ஆட்சியின் போது
3) பபிலோனியரின் ஆட்சியின் போது
4) எகிப்தியரின் ஆட்சியின் போது
5) கிரேக்கரின் ஆட்சியின் போது

18. கிரேக்கரின் ஆட்சியின் போது யூதர்களை மிகவும் துன்புறுத்தியவன்.

1) தாலமி
2) மகா அலெக்சாண்டர்
3) தெபுகத்னேசர்
4) மக்கபேயர்
5) 4ம் அந்தியோக்கு எப்பிபானு

19. கி.மு 597 இல் பபிலோனியர் எருசேலமைக் கைப்பற்றிய போது தென்னரசின் அரசனாக இருந்தவர்.

1) ஆகாசு
2) யோவாக்கீம்
3) யோசபாத்து
4) அமட்சியா
5) ரெகபயாம்

20. சாலமோன் அரசனோடு தொடர்புபட்ட கூற்றுக்கள்.

A) வாணிப போக்குவரத்திற்காக செங்கடலோரத்தில் ஒரு துறைமுகத்தைக் கட்டியவர்.

B) கீஸ் என்பவரின் மகன்.

C) யாழ் மீட்டுவதில் வல்லவர், போர்த்திறன் மிக்கவர்.

D) தன் வயோதிப காலத்தில் யாவேயை மறந்து அந்நிய தெய்வங்களை வழிபட்டவர்.

1) A C  2) A D  3) B D  4) C D  5) A B

(20x2=40 புள்ளிகள்)

❖ **பகுதி (I) இல் இரண்டு வினாக்களையும் பகுதி (II) இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி I

01. 1) கிறிஸ்தவ நாகரிகத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்திய நாகரிகங்கள் எவை? (2 புள்ளிகள்)
    2) நாகரிகம் தன்னகத்தே கொண்டுள்ள விடயங்கள் எவை? (4 புள்ளிகள்)
    3) மொசப்பத்தேமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்கள் எவை? (6 புள்ளிகள்)
    4) யூத நாகரிகம் பற்றி விளக்குக? (8 புள்ளிகள்)

02. 1) கிறிஸ்தவ நாகரிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய யூத சமயத்தின் சிறப்பம்சங்கள் எவை? (2 புள்ளிகள்)
    2) கிரேக்க மொழியின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
    3) ஞான மார்க்கத்தினர் முன்வைத்த நொஸ்ரிக்க கொள்கை பற்றி விளக்குக. (6 புள்ளிகள்)
    4) இலத்தீன் மொழியில் திருவிவிலியம் பற்றி விபரிக்குக. (8 புள்ளிகள்)

03. 1) யூதேயாவின் பகுதிகளைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)
    2) சீனாய் உடன்படிக்கையின் முக்கியமான அம்சங்கள் எவை? (4 புள்ளிகள்)
    3) இஸ்ராயேல் வரலாற்றில் அரசாட்சி உருவானமைக்கான காரணங்களை பட்டியற்படுத்துக? (6 புள்ளிகள்)
    4) இஸ்ராயேல் அரசின் பிளவுபற்றி விபரிக்குக? (8 புள்ளிகள்)

## பகுதி II

04. அ) சாலமோன் மன்னனின் ஆட்சி சிறப்புக்களை விபரிக்குக?
    ஆ) இன்றைய காலத்தில் நாட்டுத்தலைவர்கள் தமது தாய் நாடு மட்டில் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புக்கள் பற்றி ஆராய்க?
    (20 புள்ளிகள்)

05. அ) இஸ்ராயேல் வரலாற்றில் நீதித்தலைவர்களின் வகிபாகம் பற்றி விபரிக்குக?
    ஆ) உமது சமூகத்தின் வளர்ச்சிக்காக நீர் முன்வைக்கும் ஆலோசனைகளைக் குறிப்பிட்டு விளக்குக?
    (20 புள்ளிகள்)

06. அ) கிரேக்க மொழியில் திருவிவிலிய மொழி பெயர்ப்பின் தேவை பற்றி மதிப்பீடு செய்க.
    ஆ) எகிப்திய நாகரிகத்தின் எத்தகைய விடயங்கள் யூத நாகரிகத்தில் தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பது பற்றி விபரிக்குக?
    (20 புள்ளிகள்)

07. அ) அரிஸ்ரோட்டில் முன்வைத்த காரண காரிய கொள்கை பற்றி விளக்குக?
    ஆ) உரோமையரின் அரசியலமைப்பு முறைகள் எவ்வாறு கிறிஸ்தவத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பதனை விபரிக்குக?
    (20 புள்ளிகள்)